# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### பேச்சு – மேற் பிரிவு – 5ம் 6ஆம் வகுப்பு மாணவர்கள்

## திருக்குறளின் பெருமை

தமிழ் மொழியை அழகுபடுத்தும் எல்லா இலக்கிய நூல்களிலும் தலைசிறந்தது திருக்குறளாகும். இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தெய்வப் புதல்வர் திருவள்ளுவரால் ஆக்கப்பட்டுள்ளது.

அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்னும் முப்பிரிவுகளை உடையது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துக் குறட்பாக்களைக் கொண்டுள்ளது. எனவே இந்நூல் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களைக் கொண்டுள்ளது.

எல்லாச் சமயத்தவரும், எல்லா இன மக்களும் போற்றுகின்ற நூலாகும். இதனால் வேற்று மொழிகள் பலவற்றில் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. இது தமிழ் மக்களுக்கு மாத்திரம் உரிய நூலல்ல. இது உலகப் பொதுநூல் ஆகும். இதனாலன்றோ கவிக்குயில் பாரதியார்

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான் புகழ் கொண்ட தமிழ்நாடு”

என்று பாடியுள்ளார்.

இந்நூலுக்கு உரைசெய்தோர் நூற்றுக்கு மேற்பட்டோர்களாவர். இவற்றுள் பரிமேலழகர் உரை சாலச் சிறந்தது எனப் போற்றப்படுகிறது.

உயர்ந்த வாழ்வியல் கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டியுள்ளதால் உலக மக்களால் மதித்துப் போற்றப்படுகின்ற நூலாக விளங்குகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த நூலை கற்றும் மனனம் செய்தும் அதன்படி ஒழுகியும் வாழ்வோமாக.